**கொடுக்கப்பட்டுள்ள செய்யுளை நன்கு படித்துக் கீழே வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

வெள்ளை நிறத்தொரு பூனை
எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதுப் பூனை
அவைபேருக்கொரு நிறம் ஆகும்

சாம்பல் நிறத்தொரு குட்டி,
கரும்சாந்தின் நிறம் ஒரு குட்டி
பாம்பின் நிறமொரு குட்டி
வெள்ளைப்பாலின் நிறம் ஒரு குட்டி

எந்த நிறமிருந்தாலும்
அவையாவும் ஓரே தரம் அன்றோ
இந்த நிறம் சிறிதென்றும்
இஃது ஏற்றம் என்றும் சொல்லலாமோ

வண்ணங்கள் வேற்றுமை பட்டால்
அதில் மானுடர் வேற்றுமை இல்லை
எண்ணங்கள் செய்கைகள் யாவும்
இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்!

- **பாரதியார்**

1. **இப்பாடலில் உள்ள உயிர் எழுத்தில் தொடங்கும் 5 சொற்களைப் பட்டியலிடுக**

___

2. **இப்பாடலில் உள்ள வண்ணங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

___

3. **கதையைப் படித்து மீதிக்கதையை உங்கள் சொந்தக் கற்பனையில் நிறைவு செய்யவும்.**
**எட்டயபுரம் எனும் ஊரில் மதியழகன் எனும் சிறுவன் இருந்தான். அவனுடைய வீட்டில் "பிங்கி" எனும் பூனைக்குட்டி இருந்தது. தினந்தோறும் பிங்கியுடன் விளையாடுவதே மதியழகனுக்கு பொழுதுபோக்கு. அப்படி ஒரு நாள் வயல் வெளியில் விளையாடிக் கொண்டிருக்கும் போது,**

___

___

___

___

___